DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW - 16

| | | |
|---|---|---|
| Name | : திரு. மகாதேவன் | Caste: |
| Father's Name: | திரு. சுந்தரம் | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Thiru. G. Sri Rama Jeyam, B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, அவர்கள், Solemnly affirmed by Tmt.A.G.Mohanasundari, Translator of this court in accordance with the provisions of Oath Act 44/1969, this the 16th day of August - 2023.

**A1 and A3 to A6 present.**

**16.08.2023.**

**முதல் விசாரணை**

நான் ஈரோடு கருங்கல்பாளையத்தில் வசித்து வருகிறேன். தற்போது ஆட்டோ ஓட்டி வருகிறேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்த காலத்தில் சேலம் அரியானூர் பிரிவு ரோட்டிலுள்ள ஐயங்கார் பேக்கரியில் கேசியராக வேலை செய்து வந்தேன். இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் எதற்காக என்னை விசாரித்தார்கள் என்றால் நான் வேலை செய்த பேக்கரிக்கு பின்புறம் கொலை நடந்ததாக சொல்லி அதற்காக விசாரித்தார்கள்.

ஆஜர் எதிரிகள் யாரையும் எனக்கு தெரியாது. மேற்படி கொலை நடந்தது சம்மந்தமாக பேக்கரியில் பேசிக்கொண்டார்கள். அதன்மூலமாகத்தான் எனக்கு தெரியும். இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் வேலை செய்த மேற்படி பேக்கரியின் பின்புறம் உள்ள பேக்காடு என்ற இடத்தில் குடியிருக்கும் தம்பியன்னன் (எ) சுந்தரமூர்த்தி என்பவரை எனக்கு தெரியும் என்றும் அவர் அடிக்கடி மாலை நேரத்தில் எனது கடைக்கு வந்து டீ சாப்பிட்டு விட்டு போவார் என்றும், என்னை விசாரணை செய்வதற்கு 4 மாதங்களுக்கு முன்பிருந்து அவர் மாலை 7.30 மணி முதல் இரவு 9.30 மணிக்குள்ளாக எனது கடைக்கு டீ சாப்பிட வருவார் என்றும், அப்போது அவர் வெளியூரை சேர்ந்த சுமார் 25 முதல் 30 வயது வரையிலான 4, 5 நபர்களுடன் சேர்ந்து டீ சாப்பிட்டுவிட்டு அவர்களுடன் பேசிகொண்டிருப்பார் என்றும், அந்த நபர்கள் உள்ளூர் வாசிகள் இல்லை மற்றும் வெளியூரை சேர்ந்தவர்கள் என்றும், கடந்த 01.09.2014 அன்று மாலை 7.30 மணியிலிருந்து இரவு 8.00 மணி வரை சுந்தரமூர்த்தியும் அவர்களுடன் வந்த 4 நபர்களும் எங்கள் கடையில் டீ சாப்பிட்டு விட்டு யாரையோ எதிர்பார்த்து பேசி'கொண்டிருந்ததாகவும், நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

02.09.2014 அன்று காலை 7.30 மணிக்கு என் கடைக்கு பின்புறம் பழனிசாமி என்பவரின் தென்னந்தோப்பில் ஒட்டமரத்துக்காட்டை சேர்ந்து விஜயன் என்பவரை யாரோ சிலர் கழுத்தை அறுத்து கொலை செய்திருப்பதாக நான் கேள்விபட்டதாகவும், 11.11.2014 அன்று மேற்படி கொலை வழக்கு சம்மந்தமாக சுந்தரமூர்த்தியும் அவரது கூட்டாளிகளும் நீதிமன்றத்தில் சரணடைந்ததாக நான் கேள்விபட்டதாகவும் நான் போலிசார் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

நான் மேற்கண்ட உண்மை சங்கதிகளை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் கூட்டு சேர்ந்து கொண்டு அவர்களை வழக்கில்

இருந்து காப்பாற்றுவதற்காக பொய் சாட்சி சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள்   தரப்பில் குறுக்கு விசாரணை  இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.</u>**

Sd/- **G. Sri Rama Jeyam,**
III Additional District Judge,
Salem